# மெட்ரோ ரயில் நிலையங்களில் சூரிய மின்சக்தி திட்டம்

சென்னை, நவ.29-

ஆலந்தூர், பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில் 1,120 கிலோ வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின் சக்தி திட்டம் செயல்படுத்தப் பட்டது.

கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல், பசுமையைக் காத்தல், பாதுகாப்பான மின் ஆற்றலைப் பெறுதல் உள்ளிட்டவற்றுக்காக சூரிய மின்சக்தித் திட்டத்துக்கு சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஊக்கமளித்து வருகிறது. அந்த வகையில், கோயம்பேடு மெட்ரோ ரயில் தலைமையகம், ரயில் நிலையங்களின் மேற்கூரைகளில் சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் நிறுவப்படுகின்றன.

முதல் கட்டமாக, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிறுவன அலுவலகத்தில் ஒரு மெகாவாட் மின்சாரத்துக்கான சூரிய மின்சக்தித் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப் பட்டது.

இதைத் தொடர்ந்து, கோயம்பேடு ரயில் நிறுவன வாகன நிறுத்துமிடத்தில் 125 கிலோவாட் உற்பத்திக்கான சூரியஒளி மின்சக்தி சாதனம் நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து, சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிறுவன அலுவலகத்தில் 350 கிலோவாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின்சக்தித் தகடுகள் மேற்கூரையில் நிறுவப்பட்டன.

ஆலந்தூர், பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில் 1,120 கிலோ வாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின்சக்தித் திட்டம் திங்கட் கிழமை வெற்றிகரமாக அமைக்கப்பட்டது.

இதுகுறித்து மெட்ரோ நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இதன் மூலம் 1,51,200 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஆண்டுக்கு ரூ.69.49 லட்சம் சேமிக்கப்படும்.

தற்போது 3 மெகாவாட் உற்பத்திக்கான சூரிய மின்சக்தி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 4.6 மெகாவாட் சூரிய மின்சக்தி திறன் நிறுவுவதற்கான பணிகள் நடைபெறு கிறது. இந்தப் பணி இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவடையும், என்றார் அவர்.